வந்து இருக்கிறது. கவுன்சில் கூட்டத்தில் ஏகோபித்த முடிவு எடுக்கப்பட்டு, 10 ஆண்டுகளாகியும் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாவட்ட வளர்ச்சிக் குழு தீர்மானத்தைக் கறாராக நடைமுறைக்குக் கொண்டுவர துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட தீர்மானத்தைப் பொறுத்தவரையில், எங்கே தடங்கல் ஏற்பட்டது என்று விவரம் இல்லை. மீண்டும் அரசுக்கு வருமானால் பரிசீலிக்கலாம்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, ஒரு கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை அரசு ஏற்றுக்கொண்டதா, இல்லையா, என்ற விவரம் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படுமா? அதோடு பல துறைகளைச் சேர்ந்த தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. அகவே, சில முக்கியமான பிரச்னைகளில் சிக்கல் வருமானால் அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அடுத்த கூட்டத்திற்கு வந்து, விவாதித்து சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஒரு மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், அரசின் பரிசிலனையில் இருக்கிறதா அல்லது அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறதா? பதில் வந்திருந்தால் என்ன பதில் என்பதுபற்றி அடுத்த குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்படுகிறது. குழுவில் அதுபற்றி விவாதித்து, மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கையைப்பற்றித் தீர்மானிக்கப்படுகிறது.

கள்ளக்குறிச்சியில் குடிசைவாழ் மக்களுக்குக் கிணற்றுநீர்

*600 வினா—திரு. துரைமுத்துசாமி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி அருகில் உள்ள கோமுகி நதியில் பேரூராட்சியில் வெட்டப்பட்ட கிணற்றில் "எச்சரிக்கை — சேரிமக்கள் அனைவரும் தொட்டியில் தண்ணீர் எடுக்கக்கூடாது, மீறினால் அபராதம் விதிக்கப்படும்" என்று தனியார் விளம்பரப் படுத்தியது குறித்து கள்ளக்குறிச்சி போலீசில் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் என்றால், இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

1978 மார்ச் 16]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) ஆம்.

(ஆ) யாரோ பெயரிடப்படாத ஒருவர் "எச்சரிக்கை—சேரிமக்கள் அனைவரும் தொட்டியில் தண்ணீர் கேட்டு வாங்கவும், மீறினால் அபராதம் 'Au hor MSKV என்ற அறிவிப்புப் பலகை வைத்திருந்தார். பேரூராட்சித் தலைவர் புகார் செய்ததின பேரில், அவ்வறிவிப்புப் பலகை உடனடியாக அகற்றப்பட்டது. அப்பலகையை வைத்தவர் யாரெனக் கண்டுபிடிக்க இயலவில்லை. அரிசனங்கள் மாமூலாக தண்ணீர் எடுத்து வருகின்றனர்.

அரசுப்பணிகளில் அரிசனங்கள் நியமனம் குறித்த உயர்மட்டக் குழு.

*601— வினா திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[அ) அரசாங்கப் பணிகளில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவீதம் இடங்களுக்கு நியமிக்கப்படுகின்றனரா என்பதைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட உயர்மட்டக் கண்காணிப்பு குழுவில் அங்கம் வகிப்போர் விபரமும், அக்குழு செயலாற்றி அபிவிருத்தி கண்டுள்ள விபரமும் அரசுக்கு ஏதேனும் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் அவை முன்வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) மற்றும் (ஆ) முதலமைச்சரை தலைவராகவும் அரிசன நலத்துறை அமைச்சரை துணைத்தலைவராகவும் மற்றும் சில அரசுத்துறை உயர் அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் கொண்டு 20-12-77-ல் இந்த உயர்மட்டக்குழு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்கள் விவரம் கீழே குறிக்கப்பட்டுள்ளது. –

குழுத்தலைவர் — முதல் அமைச்சர்.

உபதலைவர் — அரிசன நல அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS